# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.37/2023** **நாள் :26.05.2023**

**ராமாபுரம் விரிவான குடிநீர் வழங்கல் திட்டத்தின் கீழ், குறிஞ்சி நகர் கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டியின் 700மி.மீ. விட்டமுள்ள உந்து குழாயுடன் மவுண்ட் - பூந்தமல்லி சாலையில் உள்ள (சாந்தி காலனி மற்றும் டி.எல்.எப். சந்திப்பில்) 1500மி.மீ. விட்டமுள்ள பிரதான குழாயினை இணைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுவதால் 28.05.2023 அன்று காலை 6 மணி முதல் 29.05.2023 காலை 6 மணி வரை மண்டலம் - 7, 8 ,9, 10, 11, 12 மற்றும் பகுதி 13 - க்குட்பட்ட பகுதிகளில் குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம்.**

**<u>சென்னை குடிநீர் வாரியம் தகவல்</u>**

ராமாபுரம் விரிவான குடிநீர் வழங்கல் திட்டத்தின் கீழ், குறிஞ்சி நகர் கீழ்நிலை நீர்த்தேக்க தொட்டியின் 700 மில்லி மீட்டர் விட்டமுள்ள உந்து குழாயுடன் மவுண்ட் - பூந்தமல்லி சாலையில் உள்ள (சாந்தி காலனி மற்றும் டி.எல்.எப். சந்திப்பில்) போரூர் குடிநீர் பகிர்மான நிலையத்திலிருந்து செல்லும் 1500 மில்லி மீட்டர் விட்டமுள்ள பிரதான குழாயினை இணைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுவதால் 28.05.2023 அன்று காலை 6 மணி முதல் 29.05.2023 காலை 6 மணி வரை அம்பத்தூர், அண்ணா நகர், தேனாம்பேட்டை, கோடம்பாக்கம், வளசரவாக்கம், ஆலந்தூர் மற்றும் அடையாறு ஆகிய மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

எனவே, பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக, வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் (Dial for Water) குடிநீர் பெற்றுக்கொள்ள வாரியத்தின் https://chennaimetrowater.tn.gov.in/ என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம். மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம்போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும்.

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்